## தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீடு

## கிராம நிர்வாக அலுவலர் தேர்வுக்கான நுழைவுச்சீட்டு

தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட 1870 கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான எழுத்துத் தேர்வு 30.09.2012 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை, தமிழகம் முழுவதும் 244 தேர்வு மையங்களில் 3483 தேர்வுக்கூடங்களில் நடைபெற உள்ளது.

இத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டுகள் (Hall Tickets) தேர்வாணையத்தின் இணையத்தளங்களான www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.net ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான விண்ணப்ப எண்-ஐ உள்ளீடு செய்து நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்துகொள்வதில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் 1800 425 1002 என்ற கட்டணமில்லாத் தொலைபேசியிலோ அல்லது contacttnpsc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

செயலாளர்
தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்